<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 218 /2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.4 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சண்முகம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : நாகராஜ் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.09.2022.

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் உடுமலையில் வசித்து கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 29.06.2015 அன்று சுமார் காலை 11.00 மணிக்கு உடுமலை காவல் ஆய்வாளர் தாராபுரம் ரோட்டில் யுனியன் பேங்க் அருகில் சையது இப்ராகிம் என்ற நபரை கைது செய்ய இருப்பதாகவும் என்னை சாட்சியாக உடன் இருக்குமாறு அழைத்ததன் பேரில் அங்கு சென்று மேற்படி சையது இப்ராகிமை அடையாளம் காட்டி காவல் ஆய்வாளர் கைது செய்தார் அவர் மேற்படி ஆஜர் எதிரிதான். மேற்படி சையது இப்ராகிம் என் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் **(அதில் 1வது சாட்சியாக கையெழுத்து செய்தேன். அந்த கையெழுத்து அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சையது இப்ராகிம் PK டிரேடர்ஸ் மளிகை கடையில் வேலை செய்து வந்தபோதுஅ ந்த கடையின் உரிமையாளர் மகளுக்கு திருமணம் என்று தெரிந்து கொண்டு அவரது நகைகளை திருட திட்டம் தீட்டி 03.05.2015 அன்று காலை 9.00 மணிக்கு அவரது மனைவி சம்சத் உடன் சென்று PK டிரேடர்ஸ் உரிமையாளர்

வீட்டில் நகையை திருடியதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். மேலும் மேற்படி திருடிய நகைகளை தன்னை கூட்டிக்கொண்டு சென்றால் மறைத்து வைத்துள்ள நகைகளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். (**மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்பு அயிலை மீனாட்சி நகரில் உள்ள எதிரி சையது இப்ராகிம் வீட்டிற்கு சென்று அங்கிருந்த அவரது மனைவியை மகளிர் போலிசார் உதவிவுடன் விசாரித்தபோது (**அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்து அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்பு அவரது மனைவி தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் தனது வீடு மாடிப்படிக்குகீழே குழி தோண்டி மறைத்து வைத்துள்ள நகைகளை எடுத்து ஆஜர் செய்வதாக (**கூறினார் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்பு எதிரிகள் இருவரும் மாடிப்படிக்கு கீழே புதைத்து வைத்திருந்த நகைகளை எடுத்து ஆஜர் செய்தாகள் மேற்படி நகைகள் எடுத்து ஆஜர் செய்தததையும் எதிரிகள் தங்கள் வீட்டு பீரோவில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ததையும் ஒரு கைப்பற்றுதல் மகசரில் ஆய்வாளர் கைப்பற்றினார் (**அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து செய்தேன் அந்த கைப்பற்றுதல் மகசர் அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). .

4. பின்பு அங்கிருந்து எதிரிகள் பெரியார் காலணியில் பாரத் என்பவருடைய வீட்டில் மறைத்து வைத்திருந்த இரும்பு ராடு ஒன்றை சம்சத் எடுத்து ஆஜர் படுத்தியதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் அந்த கைப்பற்றுதல் மகசரில்( **நான் 1 வது கையெழுத்து செய்தேன் அந்த கைப்பற்றுதல் மகசர் அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (மேற்படி கைப்பற்றப்பட்ட என்னிடம் காட்டப்படும் இரும்புராடு சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என்னை 29.06.2015 அன்று ஆய்வாளர் போன் மூலமாக வருமாறு கூறினாரா அல்லது நேரில் வந்து தகவல் கூறினாரா என்றால் போன் மூலமாக தகவல் கூறினார். பெரியகோட்டை கிராம நிர்வாக அலுவலகம் எங்குள்ளது என்றால் உடுமலை சிவசக்தி காலணியில் உள்ளது. ஆய்வாளர் வருமாறு கூறிய இடத்திற்கும் என்னுடைய vAO அலுவலகத்திற்கும்எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் அரை கிமீ தூரம் இருக்கும். மேற்படி முதல் விசாரணையில் கூறிய வங்கி உடுமலையில் மையப்பகுதியில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி

இடத்தை சுற்றிலும் தொழில் நிறுவனங்கள் கடைகள் போன்றவை உள்ளது என்றால் சரிதான்.

2. பொதுவாக காவல் ஆய்வாளர் விசாரணைக்கு அழைப்பது ஒரு மக்கள் நடமாட்டம் இல்லாத பொதுஜன சாட்சிகள் இல்லாத இடத்தில் தான் சாட்சியாக இருக்குமாறு அழைப்பார்கள் என்றால் ஆய்வாளர் அழைத்ததன் பேரில் நான் சென்றேன். எத்தனை மணிக்கு நான் அங்கு சென்றேன் என்றால் சுமார் 11.00 மணி இருக்கும். ஆய்வாளர் உடன் யார் யார் இருந்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் இருந்தார்கள். பொது நபர்களும் ஒன்றிரண்டு நபர்கள் அங்கு இருந்தார்கள். வாக்குமூலத்தில் நான் மட்டும் தான் கையெழுத்து செய்தேனா என்றால் என்னுடன் வந்த லிங்குசாமி என்பவரும் கையெழுத்து செய்தார்.

3. நான் சென்றபோது லிங்குசாமி அங்கிருந்தாரா என்றால் இருந்தார். மேறப்டி லிங்கு சாமி என்ன பணியில் உள்ளார் என்று ஆய்வாளர் எனக்கு அறிமுகப்படுத்தினாரா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி 1ம் எதிரியை நான் சென்றபோது வங்கியின் எந்த பகுதியில் வைத்திருந்தார்கள் என்றால் பேங்க் ஓரத்தில் உள்ள கடைப்பகுதியில் வைத்திருந்தார்கள். ஜீப்பில் எதிரியை வைத்திருந்தார்கள் என்றால் ஆமாம் நான் சென்றவுடன் கூட்டி வந்தார்கள். எதிரி சொல்லச்சொல்ல அதன் விவரத்தை யார் டைப் செய்தார் என்றால் உடன் வந்த காவலர் ஒருவர் டைப் செய்தார். எதன் மூலம் டைப் செய்தார் என்றால் லேப்டாப் மூலம் டைப் செய்தார். 1ம் எதிரியுடம் எவ்வளவு நேரம் வாக்குமூலம் டைப்செய்யப்பட்டது என்றால் சுமார் ஒரு மணி நேரம் இருக்கும்.

4. பதிவு செய்த இடத்தில் வைத்தே கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரிதான். எங்கு வைத்து பிரிண்ட் எடுத்தார்கள் என்றால் பெண்டிரைவில் காப்பி செய்து அருகில் இருந்த கடையில் பிரிண்ட் எடுத்து வந்தார்கள் எந்த கடையில் பிரிண்ட் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. 2ம் எதிரியின் வீட்டு விலாசம் என்னால் கூற முடியுமா என்றால் அய்யலூர் மீனாட்சி நகர் ஆகும். அங்குதான் இரண்டாம் எதிரியின் வீடு உள்ளது என்றால் சரிதான். கதவு எண் மற்றும் எந்த திசை நோக்கி வீடு உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் கிழக்கு திசை நோக்கி வீடு உள்ளது கதவு எண் தெரியாது. மேற்படி எதிரியின் வீட்டிற்கு செல்லும்போது நேரம் என்ன இருக்கும் என்றால் மதியம் 12.45 மணி இருக்கும்.

5. இரண்டாம் எதிரியை கைது செய்த பெண்காவலரின் பெயர் எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எதிரியின் வீட்டில் பொருள்கள் எங்கிருந்து கைப்பற்றப்பட்டது என்றால் எதிரியின் வீட்டின் மாடிப்படிக்கு கீழே குழிதோண்டி புதைத்து வைக்கப்பட்டிருந்ததை தோண்டி எடுத்தார்கள். ஆயுதம் வைத்துதான் தோண்டி எடுத்தார்கள். நகையை தோண்டி எடுத்தபோது வேறு எதுவும் இருந்ததா என்றால் ஒரு டப்பா

இருந்தது அதற்குள் நகை இருந்தது. அந்த டப்பா என்ன அளவு உள்ளது என்ன கலர் போன்ற விவரம் தெரியுமா என்றால் வெள்ளைக்கலர் டப்பா சுமார் 1 அடி உயரமும் சுமார் 15 செ.மீ அகலமும் இருக்கும்.

6. திருட்டுபோன நகைகள் எவ்வளவு என விசாரணையின்போது என்னிடம் கூறினார்களா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை தோராயமாக 25–27 பவுன் இருக்கலாம். அப்போது தங்க நகைகள் மட்டும் இருந்ததா கவரிங் நகைகளும் உள்ளதா என்றால் ஆய்வாளர் தான் நகைகளை எடுத்துக்கொண்டிருந்தார் நான் அருகில் இருந்ததால் தங்கமா கவரிங் என்றா கவனிக்கவில்லை. நான் தள்ளி இருந்ததால் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் ஆய்வாளர் தங்கம் மற்றும் கவரிங் நகைகளை பிரித்துக்கொண்டிருந்தார் அதை நான் தொட்டுப்பார்க்க முடியாது என்பதால் 5 அடி தொலைவில் இருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன்.

7. அதே மடிக்கணினியில் தான் இந்த ஒப்புதல் வாக்குமூலம் டைப்செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கைப்பற்றுதல் மகசரில் முதலில் கையெழுத்து செய்தேனா ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலில் கையெழுத்து செய்தேனா என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலில் தான் கையெழுத்து செய்தேன். இரண்டாம் எதிரியிடம் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கு பிரிண்ட் எடுத்து வந்த விவரம் தெரியாது என்றால் சரிதான். மேற்படி கையெழுத்துகள் செய்வதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 1 மணி நேரம் ஆனது. பெரியார் நகரில் எந்த முகவரிக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் பெரியார் நகர் கதவு எண் ஞாபகம் இல்லை சுமார் 3.15 மணி இருக்கும். அந்த வீட்டின் உரிமையாளர் பெயர் தெரியுமா என்றால் பாரத் என்று சொன்னார்கள்.

8. மேற்படி பாரத்தின் வயது என்ன என்றால் 1ம் எதிரியின் மகளுடன் உடன் படிக்கும் மாணவன் என்று கூறினார்கள். ஆயுதத்தை யார் எடுத்து ஆஜர் செய்தார்கள் என்றல் 2ம் எதிரி எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் 2 எதிரிகளும் தான் உடன் வந்து அடையாளம் காட்டினார்கள். யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் நான் உடன் இருந்தேன் தற்போது பெயர் தெரியவில்லை. நான் எத்தனை வருடங்களாக VAO ஆக உள்ளேன் என்றால் 11 வருடமாக உள்ளேன். நான் அலுவல் ரீதியான பயிற்ச்சி வகுப்பில் கலந்து கொண்டேனா என்றால் ஆமாம். அப்போது செயல்பாடுகள் குறித்த நடைமுறை கையேடு வழங்கப்படும் என்றால் சரிதான்.

9. அதன் அடிப்படையில் VAO அலுவலகத்தில் Movement Register பராமரிக்கப்படும் என்றால் நடைமுறையில் வழக்கம் இல்லை. ஆய்வாளர் சாட்சிக்கு அழைக்கப்படும் போது வட்டாச்சியர் இடம் அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும் என்றால் நான் வாய்மொழி அனுமதி

பெற்று சென்றேன். எழுத்துமூலமாக நான் அனுமதிகேட்டு அவர் கொடுக்கவில்லை என்றால் ஆய்வாளர் அவரசமாக அழைத்ததன் பேரில் தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு வாய்மொழி உத்தரவு பெற்று சென்றேன். நான் இந்த வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல.

10 ஒவ்வொரு மாதமும் என்னுடைய கிராம பகுதிக்குள் நடந்த முக்கிய நிகழ்வுகள் குறித்த அறிக்கையை வட்டாச்சியருக்கு நான் அளிக்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் முக்கியமான நிகழ்வுகள் குறித்து அன்றே தெரிவித்துவிடுவேன். ஆனால் இந்த நிகழ்வுகள் குறித்து நான் தகவல் எதுவும் அளிக்கவில்லை என்றால் அன்றே வட்டாச்சியருக்குதகவல் கொடுத்துவிட்டேன். நான் இந்த வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் வந்த லிங்குசாமி என்ன பணி செய்கிறார் என்ன பதவில் இருக்கிறார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் அவசியம் இல்லை என்பதால் நான் தெரிந்து கொள்ளவில்லை. 2015ம் ஆண்டு முதல் இன்று வரை அந்த பகுதியின் 8வது வார்டு கவுன்சிலராக உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது

11. இந்த வழக்கு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க என் முன்னிலையில் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அதன் பேரில் கைப்பற்றுதல் மகசரில் சான்று பொருட்கள் கைப்பற்றியதாக குறிப்பிட்டுள்ளதும் உடன் லிங்கு சாமி என்பவர் இருந்தார் என்பதும் நான் வழக்கிற்காக சொல்லும் பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் போலிசாரின் கையிருப்பு சாட்சி என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது வங்கியின் அருகிலும் எதிரியின் வீட்டிலும் பெரியார் காலணியிலும் வைத்து கையெழுத்து செய்தததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய பணி விதிமுறைகளுக்கு மாறாக செயல்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.